1984 பிப்ரவரி 22]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

8. ஒழுங்குப் பிரச்சினை.

சட்ட முன்வடிவுகளின் படிவங்களை உறுப்பினர்களுக்கு முன் கூட்டியே அளித்தல்.

திரு. ரா. உமாநாத் : ஒரு ஸீரியஸ் பாயிண்ட் ஆப் ஆர்டர். பில்களை எல்லாம் இன்ட்ரொட்யூஸ் செய்வதற்கு முன்னால் அவற்றை சர்குலேட் செய்யவேண்டும் என்பது ஸ்டாச்சூட்டரி நெஸஸிட்டி, அப்படி சர்குலேட் பண்ணியதாகத் தெரியவில்லை. எப்போது பண்ணப்பட்டது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டேபிளில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இப்போது இருக்கிறது. இதை முன்னால் ஏன் சர்குலேட் செய்யவில்லை ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய அட்வான்டேஜ்க்காகச் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். அப்படி என்ன அவசரம்? நாளைக்கே செய்திருக்கலாமே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதில் ஒன்றும் முறைகேடு இல்லை.

திரு. ரா. உமாநாத் : மத்தியானம் டேபிளில் வைத்துவிட்டு உடனே இப்போது இன்ட்ரொட்யூஸ் செய்தால் என்ன அர்த்தம்? சட்டப்படி முன்கூட்டியே சர்குலேட் செய்யவேண்டியது ஸ்டாச்சூட்டரி ரிக்வயர்மென்ட்.

திரு. என். எஸ். வி சித்தன் : டேபிளில் வைத்து விட்டால் போதுமா, பில்லை நாங்கள் படித்துவிட்டுத்தானே பேசவேண்டும்.

Thiru R. Umanath: B fore introducing we must know what you are going to introduce. At least one day before it must b circulated. That is our understanding.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருஉமநாத் அவர்கள் தெரிவித்ததைப்போல் ஒருநாளைக்கு முன்னால் வைப்பதுதான் முறை. எதிர்பாராத நிலை ஏற்படும்போது இரண்டு நாட்கள்தான் சட்டசபைக் கூட்டம் இருப்பதால் அதற்குள்ளே அதை விவாதிக்கவேண்டுமென்கிற காரணத்தால் முன்கூட்டியே வைத்துவிட்டு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது. நாளை இந்த பில்லை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும்போது உங்கள் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. இன்று முன்கூட்டியே வைத்துவிட்டு உடனடியாக அறிமுகப்படுத்தியிருக்கிறோம். அதற்குக் காரணம் நாளைக்குள் சட்டமுன்வடிவுகளை எடுத்துக்கொண்டு முடித்துவிடவேண்டுமென்ற அவசர நிலைதான் இது எப்போதும் தொடரும் என்ற நிலைமை கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் ஒரு நாளைக்கு முன்னலே சுற்றுக்கு, சர்குலேட் செய்யக்கூடிய அத்தகைய நிலை கடைப்பிடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இனி எல்லா விவகாரத்திலும் நடைமுறையை மீறாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

9. அரசினர் தீர்மானம்.

வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் பற்றிய

வெள்ளை அறிக்கை விவாதம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" பேரவையில் 20—2—1984 ஆம் தேதியன்று வைக்கப்பெற்ற 'வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கை* விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் ".

---

* 278-303-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.